**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**

**நகர்மன்ற சிறப்புக்கூட்டம்**

**நாள். 8.3.2019 வெள்ளிக்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 8.3.2019

**மன்றப்பொருள்: 1**

இந்நகராட்சியின் நகரமைப்புப்பிரிவில் புதியதாக கட்டிட வரைபட வரைவாளர் உரிமம் பதிவு செய்யும் பொருட்டு திரு. ஆர்.ராஜேஷ்குமார், பி.இ., த/பெ. ராஜேந்திரன் என்பவர் விண்ணப்பம் செய்துள்ளார். அன்னாரை இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு வழங்குவது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இந்நகராட்சி நகரமைப்பு விதிகளுக்குட்பட்டு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3966/2018/எப்1.)

---

**மன்றப்பொருள்: 2**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன் விதி 23–ல் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களுக்கு கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் திட்ட அனுமதி கட்டணம் ஆகியவற்றினை நடைமுறையில் வசூலிக்கும் தொகையிலிருந்து கூடுதலாக 50 சதவீதம் வசூலிக்கவும், மேலும் ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்க விண்ணப்பிக்கும் நபர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்திய கட்டண விகிதம் முழுவதும் செலுத்தப்பட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

தற்போது கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி காலம் மூன்று ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தி உள்ளதால் முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களுக்கு நடைமுறையில் வசூலிக்கும் தொகையில் 50 சதவீதம் கூடுதலாக வசூல் செய்யவும், மேலும் ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்க விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்திய கட்டண விகிதம் முழுவதும் செலுத்த மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண். 11150/2019/எப்.1

---

<u>மன்றப்பொருள்: 3</u>

உசிலம்பட்டி நகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள கட்டிடம் சம்பந்தமான உரிமையாணை கட்டணங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 321(2), 328 மற்றும் 329 ன்கீழ் மற்றும் அரசு ஆணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019ன் வழிகாட்டுதலின்படி 01.04.2019 முதல் மாற்றியமைக்கப்படவுள்ள கட்டண விபரங்கள்.

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவுகள் | காரியம் அல்லது தொழிலின் பெயர் | எண்/ அளவு விபரம் சதுர மீட்டரில் | அனுமதி காலம் | பழைய கட்டண விகிதம் ரூ. | புதிய கட்டண விகிதம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 197(1)(பி), 198, 199, 207 மற்றும் 201, 215, 217 | 1) குடிசை அல்லாத ஒரு கட்டிடத்தை கட்ட அல்லது புதுப்பித்துக் கட்ட (மாறுதல் செய்தல், கூடுதல் கட்டிடம் கட்டுதல் முதலியன அடங்கும்) அனுமதி அளித்தல் | | | | |
| | | Residential<br>அ) குடியிருப்பு வீடு, ஓட்டுக்கூரை, தகரக்கூரை, சிமிண்ட் தகர கூரை, லைப் ரூப் அமைக்க | 10 ச.மீ. | 5 ஆண்டுகள் | 50/– | 75/– |
| | | ஆ)ஆர்.சி.சி. கட்டிடம் கீழ்தளம் கட்ட (Ground Floor) உரிமையாணைக் கட்டணம் | 10 ச.மீ. | 5 ஆண்டுகள் | 100/– | 150/– |
| | | இ)முதல் மாடிக்கு கட்டிடம் கட்ட உரிமையாணைக் கட்டணம் | 10 ச.மீ. | 5 ஆண்டுகள் | 150/– | 225/– |
| | | ஈ)'இரண்டாவது மாடி அதற்கு மேலும் கட்டிடம் கட்ட உரிமையாணைக் கட்டணம் | 10 ச.மீ. | 5 ஆண்டுகள் | 180/– | 270/– |
| 2 | 197(1)(பி) மற்றும் 201, 215 | Non Residential<br>உ)குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு கட்ட உரிமையாணைக் கட்டணம் தட்டோடு, ஆர்.சி.சி., மற்றும் ஏ.சி.ஷீட் மற்றும் கீழ்தளத்திற்கு (Ground Floor) உரிமையாணை கட்டணம் | 10 ச.மீ. | 5 ஆண்டுகள் | 200/– | 300/– |
| | | ஊ)முதல் மாடிக்கு கட்டிடம் தட்டோடு, ஆர்.சி.சி., ஏ.சி.ஷீட் | 10 ச.மீ. | 5 ஆண்டுகள் | 225/– | 450/– |
| | | எ)இரண்டாவது மாடியும் அதற்கு மேலும் தளம் கட்ட அனுமதி கட்டணம் | 10 ச.மீ. | 5 ஆண்டுகள் | 250/– | 500/– |
| | | ஏ)புதியதாக படிக்கட்டு அல்லது புதுப்பிக்க கட்டணம் | ஒவ்வொன் றுக்கும் | 5 ஆண்டுகள் | 150/– | 225/– |
| | | ஐ)புதிதாக கழிப்பிடம் கட்ட அல்லது புதுப்பிக்க கட்டணம் | ஒவ்வொன் றுக்கும் | 5 ஆண்டுகள் | 150/– | 225/– |
| | | ஒ)புதிய குளியலறை அல்லது பழையதை புதுப்பித்துக் கட்ட உரிமையாணைக் கட்டணம் | ஒவ்வொன் றுக்கும் | 5 ஆண்டுகள் | 300/– | 450/– |
| | | ஓ)செப்டிக் டேங்க் புதிதாக கட்ட அல்லது புதுப்பித்துக் கட்டுதல் | ஒவ்வொன் றுக்கும் | 5 ஆண்டுகள் | 150/– | 225/– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சுவர் அல்லது வேலி அமைத்தல் ஒவ்வொரு 2.40 மீ உயரத்திற்கு மேற்படாமல் | ஒவ்வொறு 1 மீ. நீளத்திற்கும், பாகத்திற்கும் | 5 ஆண்டுகள் | 150/– | 225/– |
| 3 | 208,210 | குடிசை, கிடுகு செட் முதலியன கட்டுவதற்கு (குடிசை என்ற பதத்தில் வரும் தற்காலிக அமைப்பு அல்லது அதுபோன்ற சிறிய கட்டிட அமைப்பு) | 10 ச.மீ | 5 ஆண்டுகள் | 75/– | 150/– |
| 4 | 207, 197 முதல் 199 | 1)கிணறு வெட்ட அனுமதி அளித்தும் இட அமைப்பு ஒப்புதலுக்கும் | ஒவ்வொரு கிணற்றுக்கும் ஒரே முறை | | 150/– | 225/– |
| | | 2)கிணறு வெட்ட அல்லது புதுப்பித்து வெட்ட அனுமதி அளித்தல் (குழாய் கிணறு தோண்டுதல் இதில் அடங்கும்) | ஒவ்வொரு கிணற்றுக்கும் ஒரே முறை | | 150/– | 225/– |
| | | 3)கட்டிட வரைபட நகல் ஒன்றுக்கு | ஒரு முறை | 5 ஆண்டுகள் | 200/– | 200/– |
| | | 4)கட்டிட படவரைவாளர் உரிமம் காப்புத் தொகை | ஒரு முறை | 5 ஆண்டுகள் | 2000/– | 3000/– |
| | | 5)கட்டிட படவரைவாளர் உரிமம் கட்டணத் தொகை | ஒரு முறை | 5 ஆண்டுகள் | 500/– | 1000/– |
| | | 6)கட்டிட படவரைவாளர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் | ஒரு முறை | 5 ஆண்டுகள் | | 5000/– |
| 5 | 197(1)(ஏ) | குடிசை நீங்கலாக கட்டிடம் கட்டுவதற்கு இடம் அங்கீகாரம் செய்தல் | | | | |
| | | அ)குடியிருப்பு மனை | ஒருமுறை | 5 ஆண்டுகள் | 200/– | 500/– |
| | | ஆ)குடியிருப்பு அல்லாத மனை | ஒருமுறை | 5 ஆண்டுகள் | 200/– | 1000/– |
| 6 | 217(1) | தெருவோரங்களில் கட்டிட சாமான்கள் சேர்த்து வைக்க கட்டிட உரிமக் கட்டணத்தில் 50 சதவீதம் வசூல் செய்யப்படும்.<br>**குறிப்பு**<br>1)முன் அனுமதி பெறாமல் வைக்கப்படும் அல்லது கட்டும் கட்டிடங்களுக்கு 50 சதவீதம் கட்டணம் கூடுதலாக வசூல் செய்யப்படும்.<br><br>2)கட்டிட உரிமத்தை புதுப்பிக்க அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் புதுப்பிக்க வேண்டும். காலம் முடிவடைந்து செலுத்து பவரிடம் அபராதக் கட்டணம் ரூ.100/– கூடுதலாக வசூலிக்கப்படும். | | | | |
| 7 | 175,176,177 | காலி நிலத்தை தெருக்களாகவும், வீட்டு மனைகளாகவும் லே–அவுட் அங்கீகாரம் பெற மேற்பார்வையாளர் கட்டணம் | ஒரு ஹெக்டேர் அதன் பாகத்திற்கும் | ஒரு முறை | 2000/– | 3000/– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவின் ஒரு மனையினை பிரிக்க மனைகளை இணைக்க | ஒரு ஹெக்டேர் அதன் பாகத்திற்கும் | ஒரு முறை | 2000/– | 3000/– |
| 8 | 183(2) | பொதுத் தெருக்களில் நகராட்சி எல்லையில் உள்ள பொது இடங்களில் தற்காலிக ஆக்கிரமிப்புகள் | | | | |
| | | அ)வீட்டு விழாக்களிலும், வியாபார நோக்கு இல்லாத விழாக்களிலும் பந்தல் போடுவதற்கு | ஒவ்வொரு 10ச.மீ அதன் பாகம் | நாள் ஒன்றுக்கு | 50/– | 75/– |
| | | ஆ)வியாபார நோக்குடன் கூடிய ஆக்கிரமிப்புகள் | ஒவ்வொரு ச.மீ அதன் பாகம் | ஒரு மாத காலத்திற்கு | 50/– | 75/– |
| | | இ)கோடைகால பந்தல்கள் (போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல், கால்கள் இல்லாமல்) | இலவச முன் அனுமதி பெறவும் | மூன்று மாதங்கள் (ஏப்ரல் முதல் ஜூன் வரை) | –– | –– |
| | | ஈ)மதம் சம்பந்தமான திருவிழா காலங்களில் பந்தல் போடுவதற்கும், தேர்தல் காலங்களில் பொது இடங்களில் பந்தல் போடுவதற்கும் | இலவச முன் அனுமதி பெறவும் | மூன்று மாதங்கள் (ஏப்ரல் முதல் ஜூன் வரை) | –– | –– |
| | | நிழல் தட்டுகள்<br>1)தகரத் தட்டி | ஒவ்வொரு ச.மீ. மற்றும் அதன் பாகம் | நிதியாண்டு மட்டும் | 50/– | 75/– |
| | | 2)கிடுகு தட்டி | ஒவ்வொரு ச.மீ. மற்றும் அதன் பாகம் | நிதியாண்டு மட்டும் | 25/– | 50/– |
| | | உ)சாலை ஓரங்களில் வைக்கும் பெட்டி கடைகள், கிடுகு செட்கள், தகரக் கொட்டகைகள் | ஒவ்வொரு ச.மீ. மற்றும் அதன் பாகம் | நிதியாண்டு மட்டும் | 150/– | 150/– |
| | | 1)சினிமா, நாடகம் மற்றும் கேளிக்கை தனியார் இடத்தில் தற்காலிகமாக கட்ட | ஒவ்வொரு ச.மீ. மற்றும் அதன் பாகம் | ஒரு மாத காலத்திற்கு | 350/– | 1000/– |
| | | 2)தனியார் இடத்தில் சர்க்கஸ் கூடாரம் அமைப்பதற்கு | ஒவ்வொரு ச.மீ. மற்றும் அதன் பாகம் | ஒரு மாத காலத்திற்கு | 350/– | 1000/– |
| | | 3)சில்லரை மராமத்துக் கட்டணம் | –– | –– | 250/– | 500/– |

அ.கு: 1)அனுமதிக்கலாம்.
2)மேற்படி உரிமையாணைக் கட்டணம் செய்த விபரத்தினை தினசரி நாளிதழில் வெளியிடவும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய உள்ள செலவினத்திற்கும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 11150/2019/எப்.1

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உசிலம்பட்டி நகராட்சி

**<u>மன்றப் பொருள்–4</u>**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.44555/2013/ 3, நாள்.28.02.2019–ன்படியும் 2019 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் 12–ன்படியும் **(No,of 2019 The Tamil Nadu Municipal Laws (Second Amendment) Act 2019 Published in Tamil Nadu Government Gazette Extraordinary No. 75 dt. 21.02.2019**) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுப்புற சூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.84 நாள்.26.06.2018ன்படியும் தமிழக நகராட்சி பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட **(Use and throwaway plastics**) நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்ததன் அடிப்படையில் துணை விதிகள் ஏற்படுத்தியோ அல்லது ஏற்கனவே இயற்றப்பட்ட துணை விதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டு அரசிதழில் வெளியிட தெரிவித்துள்ளதன் அடிப்படையில் உசிலம்பட்டி நகராட்சி பகுதியில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்ட **(Use and throwaway plastics**) மற்றும் தூக்கி வீசப்பட்ட கூடிய நெகழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்தல் ஏற்கனவே இயற்றப்பட்ட உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 உசிலம்பட்டி மாவட்ட அரசிதழ் எண்.5 நாள்.08.08.2017) –இல் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிக்கான திருத்தங்கள்

| | | |
|---|---|---|
| I | 3ம் பிரிவிற்கான திருத்தங்கள் | 2016 ஆம் ஆண்டு உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 3ஆம் பிரிவில் (22) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும்.<br>23. செயலாக்க அதிகாரி, நகராட்சிப் பகுதிகளில் செயலாக்க அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.<br><br>24. ஆய்வு நடத்தி தண்டம் வசூல் செய்யும் அதிகாரி ஆய்வு செய்து பகுதிகளில் துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.<br>25. மேல்முறையீட்டு அலுவலர் இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல்முறையீட்டு அலுவலர் நகராட்சி ஆணையாளரே ஆவார்.<br>26. தண்டனைகள் விதிக்கும் முறைகள்.<br>இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை மற்றும் இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே **(Spot fine)** வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு கூடுதல் தொடர் அபராதத்துடன் உடனடியாக குடிநீர் இணைப்பு அமைத்தல் மற்றும் தொழில்களுக்கான உரிமம் ( **D & O** ) இரத்து செய்யப்படும்.<br><br>27. வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு |

| | | |
|---|---|---|
| | | I. மொத்தமாக ( **Whole Sale)**<br>சேமித்தல் / வழங்குதல் / கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் பகிர்ந்தளித்தல்.<br>II. வணிக வளாக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலை, பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.<br><br>III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள் முதலானவைகள்.<br><br>IV. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக் கடைகள், இதர சிறிய வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு, அரசு சார்பு நிறுவனங்கள். |
| | 4ம் பிரிவிற்கான திருத்தங்கள் | 2016 ஆம் ஆண்டு உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4ஆம் பிரிவில் (2) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும்.<br>2(1) பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட **(Use and throwaway plastics**) நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன. மீறினால் தடை செய்யப்பட்ட பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணை II–ல் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டும். |
| | 6ம் பிரிவிற்கான திருத்தங்கள் | 2016 ஆம் ஆண்டு உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 6ஆம் பிரிவில்.<br>(i) கூறு (2) நீக்கம் செய்யப்படுகிறது.<br>(ii) கூறு (3) நீக்கம் செய்யப்படுகிறது.<br>(iii) கூறு (4) நீக்கம் செய்யப்படுகிறது. |
| | 7ம் பிரிவிற்கான திருத்தங்கள் | 2016ம் ஆண்டு உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 7–ம் பிரிவில்<br>(i) கூறு (a) நீக்கம் செய்யப்படுகிறது. |
| | 8ம் பிரிவிற்கான திருத்தங்கள் | 2016ம் ஆண்டு உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகளில் 8ஆம் பிரிவில்<br>(8.2) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படும்.<br>8.3 இந்த திருத்தப்பட்ட துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 90 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவனை IIன்படி இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார்.<br>8.4 6அட்டவணை I,II–ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை |

| | | |
|---|---|---|
| | | அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939–ன்படி ஆணையாளர் அல்லது அவரால் முழுஅதிகாரம் அளிக்கப்பட்ட நகராட்சி அதிகாரி மூலமாக சட்டரீதியான வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். |
| | புது அட்டவணை II சேர்த்தல் | 2016ம் ஆண்டு உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகளில் அபராத அட்டவனை I–க்கு பின்பு அட்டவணை III சேர்க்கப்படும். |

## அட்டவணை – II

**2016 ஆம் ஆண்ண் உசிலம்பட்டி நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4ஆம் பிரிவில் (2(1)) ஆம் கூறில் தெரிவிக்கப்பட்ட விதிகளை மீறினால் செலுத்த வேண்டிய அபராத தொகை**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட ((Use and throwaway plastics) வகையிலான நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.25000 | ரூ.50000 | ரூ.100000 |
| II | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட (Use and throwaway plastics) வகையிலான நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.10000 | ரூ.15000 | ரூ.25000 |
| III. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட வகையிலான ((Use and throwaway plastics) நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.1000 | ரூ.2000 | ரூ.5000 |

| | | | | |
|---|---|---|---|---|
| IV. | சிறிய வணிக விற்பனையாளர்கள் மற்றும் தனியர் பயன்படுத்துபவர்களுக்கும் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட வகையிலான((**Use and throwaway plastics**) நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல், | ரூ.100 | ரூ,200 | ரூ,500 |

<u>அலுவலக குறிப்பு:–</u>
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். .2019/எச்.1)

---

<u>மன்றப் பொருள்–5</u>

இந்நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் 300 வீடுகளுக்கு ஒரு தற்காலிக மஸ்தூர் பணியாளர் வீதம் 41 தற்காலிக மஸ்தூர் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு சீலைக்காரி அம்மன் மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்சமயம் ஏற்கனவே பணிபுரிந்து வரும் 41 தற்காலிக மஸ்தூர் பணியாளர்கள் கொண்ட சீலைக்காரி அம்மன் மகளிர் சுயஉதவிக்குழு உசிலம்பட்டி மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தில் (நாள் ஒன்றுக்கு ரூ. 249/–) பணிகளை தொடர்ச்சியாக ஏப்ரல் 2019 முதல் ஜூன் 2019 வரை மூன்று மாத காலத்திற்கு பணியினை தொடர்ச்சியாக மேற்கொள்ள அதற்கான செலவினத்தொகை மாதம் ஒன்றிற்கு தோராயமாக ரூ. 3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு.

<u>அலுவலக குறிப்பு:–</u>
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

சுகாதார அலுவலர்
உசிலம்பட்டி நகராட்சி

ஆணையாளர்(பொ) / தனி அலுவலர்
உசிலம்பட்டி நகராட்சி